குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.38/2024

ம.சா. 1

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26–ம் தேதி வெள்ளிக் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | தொழில் | |
| தந்தை பெயர் | சிவசங்கரன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.50 மணி,

Complainant Suresh present. Advocate Mrs.Pavithra present for Advocate Mr.G.Prabhu for Complainant. Accused Silamparasan present. Advocate Mr.R.Mohankumar present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) ஆஜர் எதிரியின் வீட்டிற்கும் என்னுடைய வீட்டிற்கும் சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும். எங்கள் இருவர் குடும்பத்திற்கும் நல்ல அறிமுகம் இருக்கிறது. ஆஜர் எதிரியின் தந்தை உடல் நிலை சரியில்லாததால் வேலைக்கு செல்வது இல்லை, அவருடைய மகள் அதாவது ஆஜர் எதிரியின் அக்கா அவரை கவனித்து வருகிறார். ஆஜர் எதிரியின் உடன் பிறந்தவர்கள் பற்றி எனக்கு முழுவதுமாக தெரியாது, அவருடைய சகோதரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கு பொதுவாக ஒரு வில்லை வீடு உள்ளது என்றால் ஒரு வீடு இருப்பதாக தெரியும் அது என்ன வீடு என்பது தெரியாது.

2) ஆஜர் எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் வெங்கயா மண்டி நடத்தி வருகிறார் மற்றும் ஓட்டுநராகவும் அவ்வப்போது செல்வார். மேற்படி வெங்காய மண்டி யாருடைய பெயரில் வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி வெங்காய மண்டி வைத்து நடத்தவில்லை என்றாலும் அவ்வப்போது ஓட்டுநராக மட்டும் தான் செல்கிறார் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு திருமணம் ஆனது தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரிக்கு திருமணம் ஆகி விவாகரத்து ஆகிவிட்டது பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

3) தாரமங்கலத்தை சேர்ந்த சத்யா என்பவரை ஆஜர் எதிரி திருமணம் செய்து கொண்டாரா என்றால் திருமணத்தை பற்றி எனக்கு தெரியாது, மேற்படி சத்யா என்பவரின் வீட்டில் ஆஜர் எதிரி இருப்பார். அவருடைய வீட்டில் தான் சத்யா என்பவரை மனைவி என்று அறிமுகப்படுத்தி பணத்தை பெற்றார். முதலில் கொடுத்த ரூ.1,96,000/– ஐ ஆஜர் எதிரியின் வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். மேற்படி பரிவர்த்தணைக்கு ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை, சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். மேற்படி பணத்தை கொடுத்த போது எந்த ஆவணமும் ஆஜர் எதிரியிடம் இருந்து பெறவில்லை.03.12.2022 முதல் 03.06.2024 வரை ஆஜர் எதிரி அசல் பணத்தை தராமல் வட்டியை செலுத்தி வந்தார்.

4) 18.06.2024 ம் தேதி ரூ.9,00,4000/– ஐ பணமாக எனது வீட்டில் வைத்து ஆஜர் எதிரி மட்டும் வந்து வாங்கி கொண்டார். சத்யா வரவில்லை. 20.06.2024 ம் தேதி ரூ.5,00,000/– ஐ எனது வீட்டில் வைத்து ஆஜர் எதிரியிடம் பணமாக கொடுத்தேன். மேற்படி பணத்திற்கு

காசோலையை தவிர எந்த ஒரு ஆவணமும் ஆஜர் எதிரியிடம் இருந்து பெறவில்லை. காசோலை 20.06.2024 ம் தேதி மொத்த பணத்திற்கும் சேர்த்து ரூ.16,00,000/– க்கு கொடுத்தார். ரூ.16,00,000/– ஐ கடன் கொடுப்பதற்கு முன்பு ஆஜர் எதிரி நடத்துவதாக சொல்லப்படும் வெங்காய மண்டியின் உரிமம் யாருடைய பெயரில் உள்ளது என்றும் அதற்கான தொழில் வரி ஆஜர் எதிரி செலுத்திவருகிறாரா என்ற விபரங்களை தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி.

5) இந்த நீதிமன்றத்தில் மொத்தம் 4 காசோலை மோசடி வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன். ஒரு காசோலை ரூ.16,00,000/– க்கும் மற்றொரு காசோலை வழக்கு ரூ.22,00,000/– க்கும் மற்ற இரண்டு காசோலை வழக்கு ரூ.4,00,000/– க்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள STC.No.37/2024 வழக்கில் அந்த வழக்கின் எதிரி ரூ.17,00,000/– எனக்கு தர ஒப்புக் கொண்டு நொடிப்பு நிலை மனுவை ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி 4 வழக்குகளில் எதிரிகளுக்கு நான் கொடுத்த கடனை எனது வருமான வரி கணக்கில் குறிப்பிட்டு இருக்கிறேன். மேற்படி வருமான வரி கணக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

6) வருமான வரி சட்டத்தின் படி ரூ.20,000/–க்கு அதிகமான தொகையை ரொக்கமாக பரிவர்த்தனை செய்வது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் என்றால் ஆஜர் எதிரி பணமாக என்னிடம் கேட்டார். மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படி சட்டப்படி வசூலிக்கத்தக்க கடனை தவிற வேறு எதற்கும் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் ஆஜர் எதிரி பணமாக கேட்டதால் தான் நான் பணமாக கொடுத்தேன். அந்த தேதியில் எனது வங்கி கணக்கில் இருந்து பணம் எடுத்து தான் கொடுத்தேன். மேற்படி பணத்தை எனது வங்கி கணக்கில் இருந்து எடுத்ததற்கான ரசீதை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

7) இன்றுவரை ஆஜர் எதிரியின் வெங்காய மண்டியின் பெயர் மற்றும் அந்த மண்டி எங்கு உள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் வெங்காய மண்டி தாரமங்கலம் மார்கெட்டில் உள்ளது பெயர் பலகை எதுவும் இல்லை. மேற்படி வெங்காய மண்டி ஆஜர் எதிரி, சத்யா மற்றும் சத்யாவின் தாயார் ஆகியோர் நடத்தி வருகிறார்கள். சத்யா ஆஜர் எதிரிக்கு எந்த உறவும் இல்லை என்றாலும் சரியல்ல. சத்யாவிற்கு ஏற்கனவே திருமணம் ஆகி முன்னால் கணவருடன் ஒரு குழந்தை இருக்கிறது என்றாலும் சரி. சத்யாவிற்கும் அவருடைய முன்னாள் கணவருக்கும் சட்டப்படி விவாகரத்து ஆகிவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8) நான் இதற்கு முன்பாக சீட்டு கம்பெனி நடத்தி வந்தேன். நான் வருண் சீட்பண்ட்ஸ் மற்றும் அர்சன்ட் பைனான்ஸ் தாரமங்கலம் என்ற பெயரில் சீட்டு தொடங்கினேன் ஆனால் நடத்தவில்லை. மேற்படி கடன் எனது தனிப்பட்ட பெயரில் கொடுத்தேன். 2023–2024 ம் ஆண்டுகளில் நான் வழக்கு தொடர்ந்து இருக்கும் 4 நபர்களுக்கு மட்டும் தான் கடன் கொடுத்தேன். சிட்பண்ட்ஸ் பதிவு செய்துள்ளேன் அது தற்போது ரத்து ஆகிவிட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை, ஆனால் தற்போது நடத்தவில்லை. நான் நடத்தும் சிட்பண்ட்ஸ் கம்பெனி தற்போது அமலில் இருக்கிறதா என்று எனக்கு தெரியவில்லை.

9) நான் நடத்தும் பைனான்ஸ்க்கு வருமான வரி கணக்கு காட்டி வருகிறேன். சிட்பண்ட்ஸ் காட்டவில்லை. மேற்படி பைனான்ஸ் கம்பெனிக்கு எனது பெயரில் தான் வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேன். மேற்படி வருமான வரி கணக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது தொழில் வட்டிக்கு கடன்

கொடுப்பது என்றால் நான் ஜவுளி தொழில் செய்து வருகிறேன், வட்டிக்கும் கடன் கொடுக்கிறேன், வழக்கறிஞருக்கு படித்து இருக்கிறேன். நான் சீட்டு நடத்திக் கொண்டு அதற்கு ஆதாரமாக வெற்று காசோலை வாங்கி வைத்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) ஆஜர் எதிரி ரூ.16,00,000/– ம் கடன் வாங்குவதற்கான தேவை அவருக்கு இல்லை என்றால் சரியல்ல, அவருடைய வெங்காய மண்டிக்ககாவும், வண்டி வாங்குவதற்காகவும் வாங்கினார். நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் வெங்காய மண்டிக்காகவும் வண்டி வாங்குவதற்காகவும் ஆஜர் எதிரி கடன் வாங்கினார் என்று சொல்லவில்லை என்றால் பொதுவாக தொழிலுக்காக கடன் வாங்கினார் என்று சொல்லியுள்ளேன். நான் சத்யாவிற்கு கடன் கொடுக்கவில்லை. ஆஜர் எதிரிக்கும் சத்யாவிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் இருவருக்கும் தனித்தனியாக திருமணம் ஆகிவிட்டது என்றாலும் தனித்தினியாக திருமணம் ஆகிவிட்டது என்பது உண்மை தான் ஆனால் தற்போது ஆஜர் எதிரியும் சத்யாவும் ஒன்றாக வசித்து வருகிறார்கள். அவர் கடன் வாங்கிய சமயத்தில் சத்யாவை ஆஜர் எதிரியின் மனைவி என்று தான் என்னிடம் அறிமுகம்படுத்தினார்.

11) ஆஜர் எதிரியிடம் நான் கொடுத்ததாக சொல்லப்படும் கடனுக்கு காசோலையை தவிற எந்த ஆவணமும் பெறவில்லை என்பதாலும், ரூ.16,00,000/– ம் கடன் வாங்குவதற்கான தேவை மற்றும் தகுதி அவருக்கு இல்லை என்றாலும் சரியல்ல. வருமான வரி சட்டத்திற்கு விரோதமாக நடந்த பரிவர்த்தனை சட்டப்படி வழக்கு நிலைக்கத்தகது இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.33 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.